பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELANADU

மலர் 19 ஆடி 25 ஷஃபான் 23 இதழ் 179

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9-8-77


யாழ். றோட்டறி காணிவல்
இலவசக் காட்சிகள்
சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்
30-7-77 — 10-8-77
● திகிலூட்டும் தெருப்பில் பெண்ணின் பயங்கரபாய்ச்சல், ● 'பப்பட்' காட்சி ● கரகாட்டம் ● மாயாஜால வித்தைகள் ● பொப் நிகழ்ச்சிகள்.
தினமும் நடைபெறும். 6764

## மரணவிசாரணை அதிகாரி பிணையில் விடப்பட்டார்

யாழ்ப்பாணம், செவ். லஞ்சக்கமிஷனைச் சேர்ந்த இரகசியப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட யாழ். மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிஸ் நேற்று பிணையில் விடப்பட்டார்.

வேலணையைச் சேர்ந்த ஒருவர் காலஞ்சென்ற தமதுசகோதரர் மக்கள் வங்கியில் அடகுவைத்த நகைகளை மீட்கும் பொருட்டு மரண அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை மரணவிசாரணை அதிகாரி என்றநேரானையில் வழங்குவதற்கு 50 ரூபா லஞ்சம் கேட்டதாக கமிஷனுக்குச் செய்யப்பட்ட புகாரையடுத்துப் பொலிஸார் மரணவிசாரணை அதிகாரி திரு. பிரான்ஸிஸை அவரது இல்லத்தில்வைத்துக் கைதுசெய்தனர்.

திரு. பிரான்ஸிஸ் நேற்றுப் பிணையில் விடப்பட்டார். பல சட்டத்தரணிகள் அவரது சார்பில் ஆஜராகியிருந்தனர்.



இலங்கையின் வரலாற்றில் ஆட்சிமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்ற முதல் தமிழ்மகனை திரு. அ. அமிர்தலிங்கம் ஆட்சிமன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபின் யாழ்ப்பாணம் திரும்பியபோது மக்கள் அளித்த குதூகல வரவேற்பை மேலேஉள்ள படங்களில் காண்கின்றீர்கள். விமானத்திலிருந்து 'அமிர்' ஆதரவாளர்களால் தோளில் தூக்கிவரப்படுவதை முதல் படத்திலும் கழுத்து நிறைந்த மாலைகளுடன் அவர் தமது பாரியாருடன் மகிழ்ச்சிபொங்க நிற்பதை இரண்டாவது படத்திலும், விமான நிலைய வரவேற்பு அறையில் 'அமிரு'டன் வி. பி.யை மூன்றாவது படத்திலும், 'அமிர்'தம்பதிகள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவதை நாலாவது படத்திலும் காணலாம். படம்: 'தேவா' பிரபா போட்டோ.

### ராஜிநாமா

பெங்களூர், ஆக. 8
அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான திரு. கே. ஹனுமந்தையா கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்துவிட்டார்.

# இ. போ. ச. பஸ்களிலும் இலவச பயணம்

## எம்பிக்களுக்குபுதிய சலுகை

கொழும்பு, திங். தேசியஅரசுப்பேரவை உறுப்பினர்கள் இனிமேல் பஸ்களிலும் இலவசமாகப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

இதுகாலவரை எம். பிக்களுக்கு ரயிலிலும், விமானத்திலும் மட்டுமே இலவசமாகப் பிரயாணம்செய்ய அனுமதிக்கப்பட்டுவந்தது.

ரயில், விமானப் போக்குவரத்து வசதிகள் இல்லாத தொகுதிகளிலிருந்து ஆட்சிமன்றத் திற்கோ வேறு இடங்களுக்கோ பஸ்களில் பணம் கொடுத்தே இதுவரை இவர்கள் பிரயாணம் செய்து வந்தனர்.

ரயில், விமானப் போக்குவரத்து வசதியில்லாத இடங்களுக்கும் எம். பிக்கள் சென்றுவருவதற்கு வசதி செய்யும் பொருட்டே அரசு அவர்கள் இ. போ. ச. பஸ்களில் பிரயாணம் செய்வதற்கான இலவச அனுமதிச்சீட்டை வழங்க முடிவுசெய்துள்ளது. (ம-இ)

### முல்லைத்தீவு

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்: பதற்றநிலை நீங்கியது

முல்லைத்தீவு, செவ். முல்லைத்தீவில் சில தினங்களுக்குமுன் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக 13 பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு இப்பொழுது றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவுல் கொக்குத்தொடுவாய் என்ற இடத்தில் அரசியல்காரணமாக இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானார். இருவர் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றநிலைமை இப்பொழுது நீங்கியுள்ளது பொலிசார் கடும கண்காணிப்பு நடவடிக்கை எடுத்துள்ளனர். நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகப் பொலிசார் கூறினர்.

## திறமை அடிப்படையில் ஜே. பி. பட்டம்!

### நீதியமைச்சர் முடிவு

கொழும்பு, திங்கள் இனிமேல் சமாதான நீதிபதி பதவி, திறமை அடிப்படையிலேயே வழங்கப்படும். இப்படியானநியமனங்களில், அரசியல் செல்வாக்கு இடம்பெற அனுமதியளிக்கப்படாது.

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் மேற்கண்ட முடிவை எடுத்துள்ளார்.

முன்னாள் அரசினால் வழங்கப்பட்ட சமாதான நீதிபதி பதவிகள் பற்றி ஆராயப்பட்டதை தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டது.

முன்னாள் அரசினால் வழங்கப்பட்ட சமாதான நீதிபதி பதவிகள், மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்றும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இவர்களின் கல்வித்தரம், தகுதிபற்றி நுணுக்கமாகப்பரிசீலனை செய்யப்படவேண்டும் என்றும், அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

இனிமேல், சிபார்சின் பேரில் சமாதான நீதிபதி பதவி வழங்கப்படாது என்றும், திறமையின் அடிப்படையிலே வழங்கப்படும் என்றும் நீதி அமைச்சர் தேவநாயகம் தெரிவித்துள்ளார்.

### றோட்டரி காணிவல்

ஹவாய் நடனத்தை ஒட்டி 12 வயதுக்குட்பட்டோருக்கு நுழைவாயில் கட்டணமாக இன்றும் நாளையும் ஒரு ரூபா அறவிடப்படும். 3-ம் பக்க விளம்பர திருத்தமாக இதை ஏற்றுக்கொள்ளவும்.

தலைவர்,
றோட்டரிக் கழகம்.

## லொறி விபத்து: ஒருவர் பலி!

வவுனியா, செவ். வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த லொறி ஒன்று ஓமந்தையில் குடைசாய்ந்ததால் அதில் வந்த 'கிளினர்' பலியானார்.

புத்தூரைச் சேர்ந்த இந்த லொறியில் வந்த அதே இடத்தைச் சேர்ந்த சிறி என்பவரே பலியானவராவார். (இ)

## இன்று 'புளூஹவாய்'

பருவம் கூத்தாடும் அழகுப் பாவையர்கள் இருபதுபேர் ஆடும் அற்புதமான "புளூஹவாய் நடனம்" இன்று றோட்டரிக் காணிவலில் இடம் பெறுகிறது. இதுவரை யாழ். நகர்கண்டிராத மாபெரும் இசைநிகழ்ச்சியாக அமையவிருக்கும் இந்நவீன நடனநிகழ்ச்சியில் பருவமகளிர் இருபதுபேர் மாலைதீவு வாசிகளைப் போல் சிற்றிடையில் பாவாடையும் நெஞ்சில் மாலைகளுடனும் லிம்போ என்னும் அழகிய நடனத்தை, தென் கடல் நாட்டின் தாள இசைக்கேற்ப ஆடுவர். இக் காட்சியைக் கண்டுகளிக்கப் பெருந்தொகையான மக்கள் கூடுவர்என எதிர்பார்க்கப்படுகின்றது. (கி)

## விவசாய அபிவிருத்திக்கு புதிய நடவடிக்கை!

### நீர்ப்பாசன அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, திங்கள் அதிகபட்ச விவசாய உற்பத்தியின் பொருட்டு நிலத்துக்கடியில் உள்ள நீரையும் பயன்படுத்தும் திட்டம் ஒன்று வகுக்கப்படும் என்று நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. காமினி திஸநாயகா அறிவித்துள்ளார்.

இன்று கொழும்பு பண்டாரநாக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற யுனெஸ்கோ சர்வதேச நிறுவனத்தினது ஆசிய பிராந்திய மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் கணிசமான அளவு நீர் இருக்கின்ற போதிலும் விவசாயத்திற்கு நிலத்தின் கீழ் உள்ள நீரும் பயன்படுதப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தற்போது பயன்படுத்தப்படும் நீரினால் சுகாதாரக்கேடு முதலான பெரும் பிரச்னைகள் தலைதூக்காது உள்ள போதிலும் நீரில் அசுத்தம் கலக்காது பாதுகாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

நீரைப் பொறுத்தவரையில் வளர்முக நாடுகள் விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (உ)

## பொலிஸ் துப்பாக்கிக்கு ஒருவர் பலி!

(கொழும்பு)
மருதானை சங்கராஜ மாவத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்றகோஷ்டிமோதலையடுத்து பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் பலியானார்.

கோஷ்டி மோதலையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் மீது கைக்குண்டு வீசியதைத் தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச் சம்பவத்தில் லீலானந்த என்ற ஐ. ஆர். சி. யே துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானார். இருவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-இ)

## ரோட்டறி சமூகசேவை



எச். என். ஸீ. ஈ. செயல்திட்டத்திற்கமைய பரியோவான் கல்லூரி எச். என். ஸீ. ஈ. மாணவர்கள் ரோட்டறிச் சங்கத்தின் ஆதரவுடன் இராசாவின் தோட்ட ஏழைக் குழந்தைகளுக்குப் போஷாக்கு உணவுசமைத்துப் பரிமாறுகையில் இப் படம் எடுக்கப்பட்டது. ரோட்டறிச்சங்க சமூக சேவைப்பிரிவால் டாக்டர்கள் சி. விஜயராஜா, எஸ். சண்முகலிங்கம் ஆகியோரின் நிர்வாகத்தில் வைத்தியக் 'கிளினிக்' ஒன்றும் ரோட்டறி மாதர் பிரிவினரால் போஷாக்கு 'கிளினிக்' ஒன்றும் நடாத்தப்பட்டுவருகின்றது. இச் சேவை இரண்டு கிழமைக்கு ஒரு தடவை நிகழ்கிறது. படத்தில் பரியோவான் கல்லூரி மாணவர்களும், ரோட்டறி மாதர் பிரிவினரும், பரியோவான் கல்லூரி உபஅதிபர் திரு வி. ஆர். அமரசிங்கம், ரோட்டறிச்சங்கத் தலைவர் திரு ஆர். ஜே. குணரத்தினம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## 3000 மக்கள் கமிட்டிகளும் கலைப்பு! உள்ளூராட்சி அமைச்சர் நடவடிக்கை!!

கொழும்பு, திங்கள் கடந்த அரசாங்கத்திலால் நியமிக்கப்பட்ட 3000 மக்கள் கமிட்டிகள் கலைக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவின் முடிவை அடுத்த இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நாடுமுழுவதும் மக்கள் கமிட்டிகளில் நியமிக்கப்பட்டிருந்த 33000 மக்கள் கமிட்டி உறுப்பினர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் முன்னைய அரசாங்க எம்.பி.க்கள் அரசியல் ஸ்தாபனங்கள் செய்த சிபாரிசின் பேரில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

மக்கள் கமிட்டிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பாவித்து ஊழல்களுக்கு சில உறுப்பினர்கள் இடமளித்ததாக விசாரணையில் தெரிய வந்துள்ளது


### கோட்டு விற்பனவு விளம்பரம்

தொல்புரம், மாதவர் தப்பையா வழக்காளி
இல. ஈடு/730 எதிராக
மூளாய் 1. ஐயம்பிள்ளை வரப்பிரதாசனும்
2. பெண் வள்ளியம்மையும்
எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/730ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி, 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் (ஆவணி) மாதம் 10-ம் திகதி .(10-8-77) புதன் கிழமைமுற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 1927/-ம், இதில் ரூபாய் 1500க்கு 10-6-75 திகதி தொடக்கம் 16-9-76 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 465/-ம்

#### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று மூளாய் இறை "நாவிதன் தறை" நிலைப்பரப்பு இரண்டரை (2 1/2). எல்லை: கிழக்கு இக்காணிக்கும் வடக்கெல்லைக் காணிக்கும் உரிய பாதை. வடக்கு சின்னப்பெடியன் செல்லனுக்குரிய ஆதனம், மேற்கு முத்தன் செல்லனுக்குரிய ஆதனம், தெற்கு, டச்சு ரோட்டு இதடங்கலும். கிழக்கேயிருப்பதும் ஏழு முழம் அகலங்கொண்டதும், வடக்கெல்லைக் காணிக்கும் சொந்தமானதும் வடக்கெல்லைக் காணியிலிருந்து பிரதான ஒழுங்கைக்குப் போக்குவரத்துச் செய்யும் பாதையில் இதற்குரிய பங்கும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொம்மிஷனரும் விலை மதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்

தெல்லிப்பழை
14-6-1977.

6802


சீதனப் பிரச்னை:

# இளம் மனைவியின் வாழ்வை முடித்தது

யாழ்ப்பாணம், செவ் காதலித்து திருமணம் செய்து கொண்ட இளம்பெண்ணொருவர் தந்தை சீதனமாக தருவதாகக்கூறிய காணியை ஏழு வருடங்களாக எழுதித்தராமையால் மனமுடைந்து கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் மருதடிவீதியில் நடைபெற்றது.

திருமதி சுபலெட்சுமி தங்கராசா (வயது 29) என்ற பிரஸ்தாப இளம்பெண், 7 வருடங்களுக்கு முன் சின்னத்துரை தங்கராசா என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் செய்கின்றபோது தந்தை காணி ஒன்று பெண்ணுக்கு எழுதித் தருவதற்கு ஒப்புதல் அளித்திருந்தாராம். இக்காணியை பல வருடங்களாக எழுதித் தரும்படி அவர் வற்புறுத்தி வந்தும், பிணக்குகள் முடிந்ததும் எழுதித் தருவதாக தாமதம்செய்து வந்தாராம்.

இதனால் மனைவியை காணியை எழுதி வாங்கும்படி கணவர் வற்புறுத்துவாராம்.

சம்பவதினம் நாயன்மார்க்கட்டில் இருக்கும் மனைவியின் தந்தையினுடைய வீட்டுக்கு இருவரும் சென்று அன்றிரவு அங்குதங்கிவிட்டு வந்தனராம்.

அன்றும் காணியை விரைவில் எழுதித் தருவதாக கூறிச் சமாளித்து விட்டாராம் தந்தை. காலை வீடு திரும்பிய பின்னரும் கணவனின் ஏச்சுக்கு ஆளாகி மனமுடைந்து கிருமிநாசினியை அருந்தினாராம். கிருமிநாசினி அருந்தியஇவரை யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கும்போது இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டதாம். சாட்சியங்கள் மூலம் இவை தெரியவந்தன.

பிரேதபரிசோதனையின் பின் திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (கே-உ)

# காதலியின் இல்லம் முன் உயிரை போக்கமுயன்றாராம்

யாழ்ப்பாணம், திங்கள் தான் காதலித்த பெண்ணைக் கைப்பிடிக்க பெண்ணின் பெற்றோர் மறுத்ததை அடுத்து இளைஞன் ஒருவர் தமது காதலியின் வீட்டிலேயே வைத்து நஞ்சருந்தித் தற்கொலைசெய்ய முயன்ற சம்பவம் ஒன்று வேலணையில் நிகழ்ந்துள்ளது.

யாழ் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தயாளன் என்ற 26 வயது இளைஞனே தமது முயற்சியில் தோல்வியுற்று யாழ், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

சரவணையைச் சேர்ந்த ஓர் இளம் பெண்ணுடன் அப்பெண்ணின் வீட்டின் கார்ச்சாரதியாக இருந்த தயாளன் என்ற இந்த வாலிபன் காதல்கொண்டிருந்ததாகவும் கடந்த வெள்ளியன்று இருவரும் வீட்டை விட்டு மறைந்ததை அடுத்து இவர்களைத் தேடிய பெண்ணின் பெற்றோர் இருவருக்கும் திருமணம் செய்துவைப்பதாகவாக் குறுதியளித்து இருவரையும் அழைத்துவந்ததாகவும் பின்னர் பெண்ணை மறைத்துவிட்டதால் இளைஞன் பெண்ணின் வீட்டுக்குச் சென்று நஞ்சுகுடித்ததாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

திருட்டு தாலிக்கொடியை

# வைத்திருந்த பெண்ணுக்கு ஒத்திவைக்கப்பட்டஒருவருடசிறை

யாழ்ப்பாணம், செவ் 5000 ரூபா பெறுமதியான திருடப்பட்ட தாலிக்கொடியை விற்கும் நோக்கமாக வைத்திருந்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்டவழக்கில், எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 1வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கு சுதுமலையில் முருகர் கந்தசாமிக்குச் சொந்தமான 8¼ பவுண் நிறையுள்ள தாலிக்கொடியை, களவுப் பொருளெனத்தெரிந்துகொண்டும் நம்பிக்கொண்டும் தங்கள் விருப்பத்துடன் விற்றுப்பணமாக்கும் நோக்குடன் வைத்திருந்ததாக சின்னத்தம்பி கமலாம்பிகை, சின்னத்தம்பி கிருபாகரன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து 2ம் எதிரி மீதானகுற்றச்சாட்டு வாபஸ்பெறப்பட்டதால், 2ம் எதிரி விடுதலை செய்யப்பட்டார். (க)



யாழ்ப்பாணம், செவ். கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு.வ.க.ஈசுரபாதம் உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரியாக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

திரு.ஈசுரபாதத்தின் சேவையைக் கௌரவித்து கோப்பாய் வட்டார ஆசிரியர்களும் அதிபர்களும் அன்னாருக்குப் பாராட்டுவிழா வொன்றினை நடத்தவுள்ளனர்,

குழந்தைகளின் கல்வியை கருத்திற்கொண்டு அயராதுழைத்த திரு. ஈசுரபாதம் மாணவர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்களது உள்ளங்களையெல்லாம் தமது சேவையின் மூலம் கொள்ளை கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)


## வரி விளம்பரம்

### தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள கெல்ப்பர், பவுளர் (Helpers & Bubblers) தேவை. வேலைக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும். வேலை பழகுபவர்களும், பழக்கப்படுபவர்களும் உடனடியாகத் தேவை. உடனே நேரில் வரவும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 6738

### இனும்

சென். பற்றிக்ஸ் களியாட்ட விழா மைதானத்தின் அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் விற்பனையாகிறது சோயாற்றின். ஒரு பைக்கட் சோயாற்றின் வாங்கி— 1 (B) பாய்க்கையும், 1 படத்தையும் இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். 6762

### வாடகைக்கு

பிரதான வீதி சங்கானையில் வாடகைக்குக் கொடுக்க வீடு ஒன்று இருக்கிறது. விபரங்களுக்கு: 38, பிரதான வீதி, சங்கானைக்கு தொடர்புகொள்ளவும். 6806

### 20,000 கிடுகுகள் தேவை

நல்லூர் திருவிழாவின் பாவனைக்காக 20,000 கிடுகுகள் தேவைப்படுகின்றன. இவற்றை உடன் விநியோகிக்கக்கூடிய எவரும் 100 கிடுகுக்கு என்ன விலை எனக் குறித்து 10-8-77ம் திகதி பி. ப. 3-00 மணிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அரக்கு முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் அனுப்பலாம் 20,000 கிடுகுகளையும் உடன் விநியோகிக்கத் தெரிவு செய்யப்படுபவரின் இடத்திலிருந்து கிடுகுகள் எம்மால் ஏற்றிச் செல்லப்படும்.

க. சிவஞானம்
மாநகரசபை ஆணையாளர்
. யாழ்ப்பாணம்.
நகர மண்டபம்,
யாழ்ப்பாணம்.
8-8-77.

6805


## புதிய டி.ஐ.ஜி.?

கொழும்பு, திங்கள் மட்டக்களப்பு பொலிஸ் சுப்பிரீண்டன்டாகக் கடமையாற்றும் திரு. ஹியூபேட் வீரசிங்க உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது.

மட்டக்களப்பு பொலிஸ் சுப்பிரிண்டன்டாக இதற்கு முன்னரும் கடமையாற்றிய திரு. வீரசிங்க கடந்த ஆண்டு வடபகுதி கள்ளச் குடியேற்றத் தடுப்புப் பகுதி சுப்பிரிண்டன்டாக திடீர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இம்மாதம் முதலாந்திகதியிலிருந்து திரு.வீரசிங்க மீண்டும் மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்வருடம் ஜூன் மாதம் இளைப்பாறிய உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஐவர் டி. எம். வான்டுவெஸ்ட்டின் வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்படலாமென அறியப்படுகிறது. (உ)


## மரண அறிவித்தல்

### திருமதி சி. இராசம்மா

நீராவியடி சின்னத்துரை மூலேயன் பென்சனர் அவர்களது அருமை மனைவி இராசம்மா அவர்களின் தகனக்கிரியைகள் 10-8-77 புதன்கிழமை 4 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

6804

யாழ். றேட்டறி காணிவலில்

# 'புளூ ஹவாய்' (BLUE HAWAII) நடனம்

இன்றும், நாளையும் [9-8-77—10-8-77]

மாலை 9 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் சமதான திறந்தவெளி அரங்கில்

யாழ்.நகர் என்றும் காணாத உலகப் பிரசித்திபெற்ற

## ஹவாய் நடன நிகழ்ச்சி

கண்டியிலிருந்து வரும் 35க்கும் மேற்பட்ட அழகுராணிகள் கலந்துகொள்ளும்

புளூ ஹவாய்



Blue Hawaii நடனம்


கன்னியர்களின் கிற்றர் (GUITAR) சாத்தியங்கள் தெல்லடல் நாட்டில் இசைடரப்ப கவர்ச்சிகள்லி முதிவின் உணர்ச்சிவசமூட்டும்

## லிம்போ (LIMBO) நடனம்

பிரபல பின்னணி இசை அமைப்பாளர்களுடனும், பாடகர்களுடனும் புத்தம்புதிய

தமிழ், ஹிந்தி பொப் பாடல்களையும்

கேட்டுப் பரவசமடையத் தவறாதீர்கள்.



## 'சர்க்கஸ்பசிப்பியா'

"CIRCUS PACIPIYA"

இரண்டாவது ஜனத்திரள் வாரமாக


பல்லாயிரக்கணக்கான மக்களை

அதிசயிக்கச் செய்யும்

சர்வதேசப் புகழ்வாய்ந்த

சர்க்கஸ் பசிப்பியாவை

கண்டுகளிக்கத் தவறாதீர்கள்.



தினமும்: மாலை 7-30, 9-30, 11-30 ஆகிய நேரங்களில் காண்பிக்கப்படும்.

குறிப்பு: "புளூ ஹவாய்" நடனம் இலவசமாகக் காண்பிக்கப்படுவதை முன்னிட்டு மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நுழைவாயில் பிரவேசம் 3 ரூபாவாகவும், 12 வயதிற்குட்பட்டோருக்கு 50 சதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மணிவாக்கு,

மண்ணைப்பிழிந்து எண்ணெய் எடுக்கலாம். கானல் நீரால் தாகம் தீரலாம். முயற்கொம்பைக்கூடக்கண்டு பிடித்துவிடலாம். மூடனுக்கு மாத்திரம் உபதேசம் செய்யமுடியாது.

—பர்த்குஹரி

ஈழநாடு
THE EELANAADU

# தோட்டத்துறையில் மாற்றங்கள்

தோட்டத் தொழில் துறையில் முக்கியமான சில மாற்றங்களைச் செய்வதற்கு தோட்டத் தொழில் அமைச்சர் திரு எம். டி. எச். ஜயவர்தன, எட்டு அம்சத்திட்டம் ஒன்றினை பத்திரிகையாளர் மாநாடொன்றில் வெளியிட்டிருக்கிறார்.

தோட்டத்துறையில் செயல்பட்டுவந்த பல கூட்டுத் தாபனங்களையும் ஒன்றிணைத்து ஒரே அமைச்சின் கீழ் கொண்டுவருவது, உற்பத்திப் பெருக்கத்துக்கு வழி செய்வது, தோட்ட நிர்வாகங்களை திறமையாக செயல்படச்செய்வது, தொழிலாளர்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்வது, போன்ற முக்கியமான அம்சங்கள் அமைச்சரின் இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

தேயிலை, றப்பர், தெங்கு ஆகிய மூன்று தொழில்களுக்கும் தனித்தனியே மூன்று ஆலோசனைச்சபைகள் இப்பதை நீக்கிவிட்டு மூன்றுக்கும் ஒரே ஆலோசனைச் சபையைநிறுவுவதற்கு அமைச்சர் முடிவுசெய்திருக்கிறார் என்று தெரிகின்றது. அவ்வாறாயின் இந்தச்சபையில் மூன்று தொழில்துறைகளை புரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் விஷயமறிந்தவர்கள் இடம்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். இதைவிட இம்மூன்று தொழில்களிலும் சிறந்த அனுபவமும், அறிவும் பெற்ற தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும் என்றும்கருத முடியும்.

தோட்டத் தொழிலின் நடைமுறைக் கஷ்டநஷ்டங்களை தொழிலாளர் மட்டத்திலிருந்து வருபவர்களைப் போல் மற்றவர்கள் அறிந்திருக்க முடியாது. தோட்ட நிர்வாக சபைகளிலும் தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள் இடம்பெறும்வகையில் அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்பலாம்.

ஏழ்மையில் உழலும் கிராமங்களுக்கிடையில் திறமையாக நிர்வகிக்கப்படும் தோட்டங்கள் பசுமையாகக் காட்சியளிப்பதை அமைச்சர் சுட்டிக்காட்டி, அப்படியான தோட்டங்களில் நல்லகுடியிருப்பு, தண்ணீர், சாலைவசதிகள் இருப்பதாகவும் அதேசமயம் கிராமங்கள் தரம்குறைந்த வீடுகளும், மோசமான சாலைகளுமாகக் காட்சியளிக்கின்றனவென்றும் குறைப்பட்டுக்கொள்கிறார். கிராமங்களின் அபிவிருத்திக்குப்படியான தோட்டங்களின் வருமானம் பயன்படுத்தப்படவேண்டும் என்பது அமைச்சரின் கருத்து.

தோட்டங்களிலிருந்து கிடைத்துவரும் வருமானங்கள் நாட்டின் தேவைகளுக்கேபொதுவாகபயன்பட்டுவந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது. தொழிலாளர்கள் தோட்டங்களிலேயே வசிக்கவேண்டிய அவசியமிருந்ததால் அவர்களுக்கு அங்கேயே வீட்டுவசதிகளை நிர்வாகிகள் செய்துகொடுத்தனர். ஆனால் அவை மாட்டுத் தொழுவங்களைவிடக் கேவலமாகவே இருந்துவருகின்றன. அமைச்சர் குறிப்பிடுவது போல் திறமாக நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் குடியிருப்புக்கள் அழகாகவே இருந்தாலும் அங்கே குடியிருக்கும் மக்களின் நிலை வெளியிலிருப்பவர்களுக்குப் புரியாது. அழகான வீடுகளைக் கட்டிக்கொடுத்து ஒரே அறையில் இரண்டு குடும்பங்களைக் குடியமர்த்தியுள்ள 'கண்ணராவி' காட்சியை இங்கேதான் காணலாம். பல தொழிலாளர் குடும்பங்கள்மூச்சுவிடக்கூட முடியாத மோசமான சுகாதாரநிலையில் வாழ்ந்து வருகின்றன. வெளிப்பகட்டுக்கு அழகாகக் காட்சியளிக்கும் தொழிலாளர் குடியிருப்புக்களில் சரியான மலசலகூட வசதிகள்கூட இருப்பதில்லை. இந்த நிலைமைகள் பற்றி அரசு விரிவான முறையில் ஆராய்ந்து முடிவு எடுக்கவேண்டும்.

தொழிலாளர் குடியிருப்புக்களான 'லயன்'களை ஒழித்துவிட்டு கிராமங்களில் 'குடிசை' வீடுகளை அமைத்துக்கொடுப்பது பற்றி அமைச்சர் ஆலோசிக்கிறார். இதன்மூலம் கிராமமக்களுக்கும் தோட்டத்தொழிலாளர்களுக்குமிடையில் ஒருமைப்பாட்டை உருவாக்கலாம் என்பது அவர் கருத்து. பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள், கூட்டுறவு நிலையங்கள் வாயிலாகவும் இந்த ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் என்று நம்புகிறார் அமைச்சர்.

ஒரே பகுதியில் வாழும் இரு இனமக்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை உருவாக்கி அவர்கள் தேசிய அபிவிருத்தியில் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பது பொறுப்புள்ள ஓர் அரசின் கடமையென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் அது, இருதரப்பினரும் பரஸ்பரம் மதித்துப் பழகக்கூடியதாகவும், தத்தமது மொழி, கலை, கலாச்சாரங்களைப் பேணக்கூடியதாகவும் அமையவேண்டும்.

# "இசையாளர் வாழ்வை வளம்படுத்த வேண்டும்"

யாழ்ப்பாணம், செவ்

'இசைக்கும், இறைவனுக்கும் நெருங்கியதொடர்புண்டு. இதனாலேயே ஆலயங்களில் இறை வழிபாட்டில் இசைக்கு முக்கியம் அளித்துவருகின்றனர் இசையுலகில், நாம் இசைக்கலைஞர்களைப் போற்றிக் கௌரவித்தால்மட்டும் போதாது அவர்களது பொருளாதார வகையிலும் கைகொடுத்து வாழ்வை வளம்படுத்தவேண்டும்' என நாதஸ்வர வித்துவான் பி. எஸ். ஆறுமுகம் சகோதரர்களைக் கௌரவித்து நடைபெற்ற விழாவில் எஸ்.ரி. ஆர். பிலிம்ஸ்பட அதிபர் திரு எஸ். தியாகராசா குறிப்பிட்டார்.

விழா யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கதிரேசன் ஆலயத்தில், இலங்கைப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியரும் இலங்கை இராமநாதன் நுண்கலைத் தலைவருமான பேராசிரியர் டாக்டர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இசைக் கலைஞர்களுக்கு திரு. எஸ். தியாகராசா யாழ்நகரப் பொதுமக்கள் சார்பில் பொற்கிழி வழங்கிப் பேசுகையில் மேலும் கூறியதாவது:

'இசைக்கலைஞர் ஆறுமுகம் பிள்ளையுடன் நான் ஒன்றாகக் கல்விகற்றதில் அவருடைய எதிர்கால உணர்வுகளை, அவரது திறமையை நன்குணர்ந்தவன். இன்று ரஸனையான இசைக்கலைஞராக இருப்பது அவரது விடாமுயற்சியும், ஊக்கமுமேயாகும்' என்றார்.

இசைக்கலைஞர்களை ஒவ்வொருவருடமும் போற்றி அவர்களுக்கு விழா எடுப்பதென ஆதீனத்தின் முடிவிற்கமைய இவ்விழா எடுக்கப்படுகின்றது. இந்த முயற்சியை எந்தவொரு பெருமகனும் பாராட்டாமல் இருக்கமுடியாது. எனவே பி. எஸ். ஆறுமுகம் சகோதரர்கள் பல்வகைச் சிறப்புற்றோங்க நான் ஆசீர்வதிக்கின்றேன்' என ஆசியுரைவழங்கிய நல்லை ஆதீன முதல்வர் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரியசுவாமிகள் குறிப்பிட்டார்.

விழாவில் இசைக்கலைஞர்களுக்கு பட்டமளிப்பு நடைபெற்றது. வீரமணிஐயரின் பாமாலைவழங்கல் நிகழ்ச்சியும் விசேட தவில்-நாதஸ்வரநிகழ்ச்சியும்இடம்பெற்றன. (கெ)

நகரங்களில்

# காய் கறி விநியோகத்தில் புதிய நடைமுறை

கொழும்பு, திங்கள்

பிரதான நகர்களில் காய் கறி, உணவுப் பொருட்களை மக்களுக்கு சீராக விநியோகம் செய்யும் வகையில் கூட்டுறவு மொத்த வர்த்தக நிலையங்களை நிறுவ வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

உற்பத்தியாளரிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் காய்கறிகளும்உணவுப்பொருட்களும் சிறிய வர்த்தகர்களுக்கு விற்பனவு செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன என்று விற்பனவு திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியின் உத்தரவின் பேரில் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

முதலில் கண்டியிலும் காலியிலும் இவ்விற்பனவு நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (உ)

# இன்று செயல்திட்ட கருத்தரங்கு

வேலணை செவ்

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் இருக்கும் கிராம முன்னேற்றச் சங்கங்கள் இதுவரை செய்துவந்த செயல் திட்டங்களை ஆராய்வதற்கான கருத்தரங்கொன்று இன்று வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு.மு சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இக்கருத்தரங்கில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா மாவட்ட கிராம அபிவிருத்தி அதிபர் திரு.ஆர்.நடராசா, பொதுசனத் தொடர்புகள் அதிகாரி திரு. பி.எல் பற்றிக் வேலணை கிராம அபிவிருத்தி அதிகாரி திரு.ஏ விஜயநாதன் உட்பட பலர்கலந்து கொண்டு கருத்துரை வழங்கவிருக்கின்றனர். இக்கருத்தரங்கிற்கு சகல கி.மு.சங்கங்களின் பிரதிநிதிகள், சகல கி.சேவையாளர்களும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். (இ)

# மாரிகால மண்ணரிப்பை தடுக்க புதிய திட்டம்

மட்டுவில், திங்கள்

தென்மராட்சிப் பகுதியில் பனை, தென்னந்தோப்புகளில் ஒருவகைபுல் வளர்ப்பதற்கான புதிய திட்டமொன்றை தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. எஸ் வேல்முருகு அமுல்செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

செப்டம்பர் மாதம் முதல் இப்புல்வளர்ப்புத்திட்டம் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

இப்புதிய திட்டத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபாலாவின் சிபார்சின் பேரிலேயே இங்கு அமுல் செய்வதற்கான நடவடிக்கைகளை இவர் மேற்கொண்டுள்ளார்.

இப்புல்லை வளர்ப்பதின் மூலம் மாரிகாலங்களில் ஏற்படும் மண் அரிப்புத் தடைப்படுவதுடன் தென்னைக்குத் தேவையான ஈரலிப்புத் தன்மையை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று நம்பப்படுகிறதாம் இதைவிட ஆண்டுமுழுவதும் கால் நடைகளுக்கு உணவாகவும் இப்புல் பாவிக்கமுடியுமாம்.

இப்புல்லை வளர்க்கவிரும்பிய கிராம மக்களின் பெயரைப் பதிவுசெய்து, அவர்களுக்குஇப்புல்விநியோகம் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி உதவி அரசாங்க அதிபர் தென்மராட்சிப் பகுதியில் உள்ள சகல கிராம சேவையாளர்களையும் கோரியுள்ளார். இப்புல்வளர்ப்பதற்கு நிலம் பண்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# "அகஇருள்நீங்க குருபக்தி அவசியம்"

## ஆத்மஜோதி முத்தையா பேச்சு

மட்டுவில், திங்

''மனிதனின் அகஇருளைப் போக்கி அவன் முத்தி இன்பத்திற்கு வழிகாட்ட முக்கியமானவர் குரு. குருவை வணங்கி, குருவின் உபதேசம் பெற்று, அவர் கொடுத்த உபதேசத்தை செயற்படுத்த வேண்டியகாலம் சாதுர்மாதமாகும். இது ஆடி மாதம் முதல் நான்கு மாதங்களாகும். இந்த நான்கு மாதங்களும்துறவிகள் தவநிலையிலும், மெய்ஞான நிலையிலும் இருப்பார்களே தவிர வெளியில் செல்லமாட்டார்கள்''.

இவ்வாறு ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா கூறினார்.

சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் ஆலயத்தில் நடைபெற்ற குருபூர்ணிமா' விழாவில் திரு. முத்தையா பேசினார்.

சாவகச்சேரி திவ்யஜீவனசங்கத்தின் ஆதரவில் பிரம்மஸ்ரீ க சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் இந்தவிழா நடைபெற்றது. திரு. முத்தையா தொடர்ந்து கூறியதாவது:

''இந்த உலகிலேபுறஇருளைப் போக்க சூரியன், சந்திரன், அக்கினி ஆதியன பயன்படுகின்றன. ஆனல் மனிதனின் அகஇருளைபோக்க 'குரு'ஒருவரே வேண்டும். ஆகவே நாம் ஒரு குருவிடம் சேர்ந்து உபதேசம் கேட்டு அதைச் செயற்படுத்தி அதன்படி ஒழுகினல்தான் எமக்கு முத்தியின்பம் கிடைக்கும். எமக்கொரு குரு கிடைக்கும் வரையும் நாமே பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் ஞானத்தில் பக்குவநிலையை அடைந்ததும் இறைவனே எமக்கொரு குருவை அனுப்பிவைப்பார்'' என்றார். தொடர்ந்து சிவநாமபஜனையும் இடம்பெற்றது.

நல்லைஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் கதா காலட்சேபம் செய்தார். (உ)

# ஜோர்ஜ்டவுன் மாநாடு

ஜோர்ஜ்டவுன், ஆக.8

கடந்த ஆண்டு கொழும்பில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் உச்சிமகாநாட்டில் இயற்றப்பெற்ற தீர்மானமொன்றிற்கு அமைய,மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் 10சர்வதேச சங்கங்களின் மகாநாடு நடைபெற்றது.

மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் வளரும் நாடுகளின் கவுன்சில் ஒன்றினை அமைக்கும் விஷயம் பற்றி இம் மகாநாட்டில் முக்கியமாக ஆராயப்பட்டது. (உ)

# கூடுதல் அதிகாரம்

கொழும்பு, திங்கள்

நெற்சந்தைப்படுத்தும் திணைக்களத்திற்கு அரசாங்கம் கூடுதல் அதிகாரங்களை அளித்துள்ளது.

இதன் மூலம் விவசாயிகளின் கஷ்டங்கள் தீர வழி பிறக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# இலங்கையின் கல்வித் தரத்திற்கு பாராட்டு

கொழும்பு, திங்கள்

இலங்கையின் கல்விஅமைப்பு சமூகதேவைக்கு ஏற்ப அமைந்துளது என்று சர்வதேசக் கல்விமான் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

நான்குநாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு தற்போது இலங்கை வந்துள்ள கலிபோர்ணிய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவரும் கல்வித்துறையில் சர்வதேசபுகழ் பெற்றவருமான கலாநிதி ஸ்டீபன் ஹோான் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

இலங்கையில் தொழில்நுட்பகல்விக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் குறித்தும் கலாநிதி ஹோான் மேலும் தெரிவித்தார். (உ)

(முன் தொடர்ச்சி)

நமது நாட்டின் இளைஞர்களானோர், நேர்மையற்றோர் சிலரால் தமது சொந்த அரசியல் தன்னலத்துக்காகத் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்டமையையும், அதன் விளைவாக 1971 ஏப்பிரல் மாதம் நேர்ந்த அரசுக்கெதிரான கிளர்ச்சியையும், எனது அரசாங்கம் கவனத்திற் கொள்கின்றது அத்துடன் தண்டிக்கப்பட்டோர் தொடர்பாக அது மீளாய்வுகள் நடாத்தும் என்பதொடு அவ்வாறு தவறாக இட்டுச் செல்லப்பட்டு, இந்நாட்டின் பிரசைகளாகப் பயனுள்ள வாழ்க்கைவாழ இதுப்படியாகவே இயலாது போயுள்ளோர் உரியவாறு வாழ எனது அரசாங்கம் எல்லாவாய்ப்புகளையும் அளிக்கும்.

## தொழிற்சங்க இயக்கம்

இன்று தொழிற்சங்க இயக்கம் நிலைகுலைந்து போயிருக்கிறது. அரசிற் கட்சி ஒவ்வொன்றும் தனக்கேயுரிய தொழிற் சங்கத்தை ஒழுங்கமைக்க விழைகிறது.

உற்பத்தியின் காரணிகள், முதலாளித்து வர்க்கத்தினருக்குச் சொந்தமாக இருந்த போது, தொழில் உலகு அனைத்தும் அவர்களுக்குக் கடமைப் பட்டிருந்த காலம் தொழிற் சங்கங்கள் உதயமாயின. இவ்விரு வர்க்கத்தினருக்கும் இடையில் அடிக்கடி நிலவிய போராட்டநிலை காரணமாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் நிகழ்ந்தன. அவைமாத்திரமல்லாது இரத்தமும் சிந்திற்று. உற்பத்திக் காரணிகள் மக்களுக்குச் சொந்தமாக இருக்கும் ஒரு சோசலிச சமுதாயத்தின் இந்நிலைமை கட்டாயமாக மாற்றப்பட வேண்டும். தொழிற்சங்கங்கள் உள்ளபடியாக வ சனநாயக அடிப்படையில் அமைந்து, வெளியாரின் கட்டுப்பாடிலிருந்து விடுபட்டனவாக இருத்தல் வேண்டும். சுயமுகாமையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள ஊழியர்கள், தமது விதியைத் தாமே நிர்ணயித்தற்கும், தாம் பணிபுரியும் நிறுவனத்தைக்கொண்டு நடாத்தற்கும், ஆற்றல்படைத்தோராக இருத்தல்வேண்டும். அவர்கள் தமது கையாலான உழைப்பின்மீது மாத்திரமன்றி அவ்வுழைப்பின் பயன் மீதும் கட்டுப்பாடு கொண்டோராக இருத்தல் வேண்டும்

தமது வேலைக்களங்களுக்கு முகாமை வகிக்கும் ஊழியர்களின் ஒழுங்கமைப்புகள், அரசியற் சார்பின்றி உருவமைக்கப்படும். பதவிவகிந்போரைத் தெரிவு செய்தற்கான தேர்வுகள் கிரமமாக நடாத்தப்பெறும். சம்பளப் பட்டியல்கள் வாயிலாகத் திரட்டப்பெறும் நிதிகள், உறுப்பினரின் நலன் கருதி அரசினமேற்பார்வையோடு பயன் படுத்தப்படும் முகாமைக்குழுவில் சேவையாற்றுவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட இவ்வொழுங்கமைப்புகள்பேராளர்களுடன் அரசினால் நியமிக்கப் பெற்றோரும் சேர்ந்து பணியாற்றுவர்.

அதிகப்படியான தொழிலாட்களைக் கொண்ட உள்ளூர்மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் சிறு அளவு நடுத்தர அளவுக் கைத்தொழில்களான வை நேரடி நிதி ஊக்குதல்களினாலும், பிற ஊக்குதல்களினாலும் உற்சாகப்படுத்தப்பெறும்.

## கைத்தொழில் அபிவிருத்தி

வெளிநாட்டுக்கூட்டுழைப்பின் மூலமான அல்லது நேரடி ஈடுபாடுடைய கைத்தொழில் அபிவிருத்திக்கு ஊக்கமளிக்கப்பெறும். பெரும்பாலும் ஏற்றுமதிக்கு உகந்த, தொழில் வாய்ப்பை அதிகரிக்கும், வெளிநாட்டுச் செலாவணி ஈட்டும், வெளிநாட்டு உதவியின்மீது தங்கிநிற்றலைத் தவிர்க்கும், தீர்வை, வரிக் கட்டுப்பாடற்ற வாணிப வலயங்கள் வாயிலாகக் கைத்தொழில்களுக்கு ஏற்றம் அளிக்கப்படும்,

அரசின் கொள்கை விளக்கம்:

# கிராம சுகாதார வைத்திய சேவைகள் சீரமைக்கப்படும்

## வீடமைப்புக் கடனுக்குக் காப்புறுதி வசதி

முன்பு நடைமுறையிலிருந்த உடல்நலம் பேணல், நோய் முன்தடுப்பு என்பவை தொடர்பான உயர் தராதரங்களை எனது அரசாங்கம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரும். மேலும் சுகாதாரச் சேவைகளில் குறிப்பாகக் கிராமப் புறங்களில் ஆயுள்வேத மேனாட்டுச் சிகிச்சை முறைகள் வாயிலாக எனது அரசாங்கமானது மேலுஞ் சில சீர்திருத்தங்களைப் புகுத்தும்.

இக்குறிக்கோளை எய்தற்கு பின்வரும் நடவடிக்கைநெறி பின்பற்றப்படும்:-

(1) பின்வருவனவற்றைக் கொண்டு கிராமப்புறப் பிரதேசங்களில் வைத்திய சுகாதாரச் சேவைகள் சீர்திருத்தப்படும்:-

(அ) தகைமை பெற்ற வைத்திய ஆளணியினரை, தேவையான வாய்ப்பு வசதிகளுடன் கிடைக்கக் கூடியதாக்கல்.

(ஆ) உடனடி திறமை வாய்ந்த வைத்திய சிகிச்சை கிடைக்க கூடியதாகும் பொருட்டு, தற்போதுள்ள வைத்தியசாலை வசதிகளை நவீனமயமாக்கிச் சீர்திருத்தல்.

(2) வைத்திய ஆளணியினரினதும் துணைநிலை வைத்திய ஆளணியினரினதும் குறைபாட்டை நிவிர்த்தி செய்தற்காக ஓரளவு பயிற்றப்பெற்ற சுகாதார உதவியாளர்களைக் கொண்ட துணை வைத்தியச் சேவையொன்று நிறுவப்படும்.

(3) சுகாதாரக் கல்வி பிணி பாற் பீடிக்கப்படாதிருக்க வழிவகுத்தற் திட்டங்களை உள்ளடக்கிய செயற்திட்டமொன்றை உருவமைத்தல் வாயிலாகவும், பாடசாலைகளில் கிளினிக்குகள் நிறுவுவதன் வாயிலாகவும் தடுப்புவைத்திய முறை பெருமளவு வலியுறுத்தப்படும். இவற்றுக்கு ஆதாரமாக, நீர், கழிகாலமைப்பு, உணவு, வீடமைப்பு, சூழற் சுகாதாரம் என்பன தொடர்பான சமூக சுகாதாரத் தொழிற்திட்டங்கள்தொடக்கி வைக்கப்படும்.

(4) மேலுஞ்சிறந்த குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டச் சேவைகள் அரசினால் வழங்கப் பெறும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை நடைமுறையிற் பின்பற்றிவரும் ஆட்களுக்கு நிதி ஊக்கம் அளிக்கப் பெறும். சனத்தொகைத் திடீர்ப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவது இதன நோக்கமாகும்.

(5) தேவையான ஊக்குதல்களை வழங்குதலின் மூலம் மருந்துவகைகளை உள்ளூரிலேயே உற்பத்தி செய்யுமாறு வெளிநாட்டு உள்நாட்டு, வணிகக் குழாங்களுக்கு உற்சாகமளிக்கப்பெறும்.

(6) மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஆயுள்வேத வைத்திய சாலைகள் தாபிக்கப்பெறும். தற்போதைய அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக நிதி கிடைக்கற் பாலதாக்கப்படும்.

(7) வைத்திய மூலிகைகளை வளர்க்கும் பொருட்டான ''பாத்திகள்'' அமைக்கப்பெறும்.

(8) ஆயுள்வேதக் கல்லூரியானது பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்பெறும் ஆராய்ச்சிக்கும் புதிய மருந்து மருந்துவகைகளின் அபிவிருத்திக்கும் எல்லாவகையான உற்சாகமும் ஊட்டப்பெறும்.

(9) இந்நாட்டுச் சுகாதார சேவைகளைப் பொறுத்தமட்டில் பதிவு செய்யப்பெற்ற ஆயுள்வேத வைத்தியர்கள் முற்றாக அங்கீகரிக்கப்படுவர். இயன்ற அளவு ஆயுள்வேத நிறுவனங்களுக்கு ஆயுள்வேத வைத்தியர்களே தலைமைதாங்குவர்.

### தேசிய காப்புறுதித் திட்டம்

விவசாயி, மீனவர், சிறு வியாபாரி, வணிகர், தச்சர் மேசன், ஓவியர், பாடகர், நடனமாடுபவர், எழுத்தாளர் போன்ற சுயமுயற்சிப் பிழைப்பாளர் எதிர்காலம் முதுமை, மணி, வலுவிழப்பு என்பனவற்றைப்பற்றி நிச்சயமின்றியும் அச்சத்திதுடனும் எண்ணி ஏங்குவர் இவ்வுறுதியின்மையினின்றும் அவர்களை விடுவித்தற்குத் தேசிய சமூகக் காப்புறுதித் திட்டமொன்று தாபிக்கப்படும். இதன் துணைகொண்டு தன்முயச்சியால் வாழ்ந்துவரும் இளைப்பாற்றுச் சம்பள சுகாதார நலன்களைப் பெற்றிரா இத்தகையோரும் தங்கிவாழும் ஊழியர்களும் இளைப்பாறிய பின்பு முதுமையில் நோய்வாய்ப்பட்ட தருணங்களில் அல்லது வலுவிழந்த நிலைக்குத் தள்ளப்பட்டால், தம்மையும் தமது குடும்பத்தினரையும் பேணக் கூடியதாக இருக்கும்.

எனது அரசாங்கமானது, தொழில்பார்க்கும் தாய்மாரினது குழந்தைகளுக்கான பாலர் பராமரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கும், பேணுதற்கும் அவசியமான உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளிக்கும். இவ்வாறே முதியோர், உடல்வலு இழந்தோர், மூளைத்திறன் பாதிப்புற்றோர், சமுதாய வாழ்வு பாதிக்கப்பட்டோர் முதலாயினோர்க்கும் இல்லங்கள் அமைத்தற்கு வேண்டிய உற்சாகமும் ஊக்கமும் அளிக்கும். பொதுவில் சமுதாய நலன்கருதி சமூக நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கும் இங்ஙனமே எனது அரசாங்கம் துணை நிற்கும்.

வீடு கட்டவோ, கொள்வனவு செய்யவோ விரும்புவோர்க்கும், அரசு அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை ஒன்றுக்குச் சொந்தமான வீடு ஒன்றை வசிப்பாளருடைய உடைமையாக மாற்றுதற்கும் உதவி அளிக்கப்பெறும். மேலும் வாடகைப்பணம் இறுக்கும் வசிப்பாளர் ஒருவரது குடியிருப்பின் பாதுகாப்பை உறுதி செய்தற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வீட்டுக்குச் சொந்த மானோரின் சமுதாயமொன்றை அமைத்தற்கும் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(1) வங்கிகள், தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் வாயிலாக நியாயமான வட்டி விதங்களுடன் பொதுமக்களுக்கு மேலுமதிக நிதி கிடைக்கக் கூடியதாக்கப்படும்.

(2) வீடமைப்புக் கடன் தொடர்பாகக் காப்புறுதித் திட்டமொன்று வகுக்கப்படும். அதன்மூலம் ஒருவர் தமது வீடமைப்புக் கடனைத் தவணைப்பணமாக இறுத்துக் காப்புறுதி செய்துகொள்ளலாம் என்பதோடு, நிதி இடர்ப்பாட்டு வேளைகளில் நிவாரணம் பெற்றுக்கொள்ளலாம். அல்லாமலும் இறந்துபோனதும் அவர்மீது தங்கிவாழ்வோர்க்கு ஓர் இல்லத்தின் பாதுகாப்பையும் அவர் அளிக்கக்கூடியவராவார்

(3) தொழில் புரிவோருக்காக வீடமைப்பில் முதலீடு செய்தற்பொருட்டு தொழில் கொள்வோருக்கு நிதி ஊக்கங்கள் வழங்கப்படும். அரச ஊழியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது முழுப் பதவிக் காலத்தின்போதும் இயன்றளவு ஒரேயொரு மாவட்டத்தினுள் அவர்களை வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(4) ஒரேயொரு வீட்டின் சொந்தக்காரராக இருக்கும் ஆளெவருக்கும் நிவாரணம் அளித்தற்காக 1972 ஆம் ஆண்டின் வாடகைச் சட்டமானது திருத்தியமைக்கப்படும். வீட்டுச் சொந்தக்காரர் ஒருவரின் கோரிக்கைகள் நியாயமானவையும் நீதியானவையுமாயின், குறிப்பாகத் தமது அல்லது தம்மீது தங்கிவாழும் ஒருவரது வதிவுக்காகவேதவிர, வேறொரு வதிவாளரைக் குடியமர்த்த அல்ல எனக் காணப்பட்டால், வீட்டுச் சொந்தக்காரர் ஒருவர், தமது சொத்தினை மீண்டும் தம்வசம் பெற்றுக்கொள்ளக்கூடியவராவார்

(5) குறைவு விலை வீடமைப்புத் திட்டங்களானவை, குறிப்பாகக் கிராமப் புறங்களில், சுய உதவி அடிப்படையில், மேலும் கவர்ச்சிகரமான முறையில் ஒழுங்கமைக்கப்படும்.

(6) மேசன்மார், தச்சர்கள், மற்றும் பிற திறன்வாய்ந்த தொழிலாளர்களைக் கொண்ட கட்டிடங் கட்டுவோரின் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படும். அத்துடன், வீடுகள் தேவைப்படுவோர்க்கு இல்லங்கள் அமைத்துக்கொடுத்தற்கு உதவு முகமாக, அச்சங்கங்களுக்கு நிதி, பண்டங்கள், தொழில்நுட்ப உதவி என்பன கொடுபடும்.

(7) செங்கல், ஓடு, உற்பத்திக் கைத்தொழில்களும், மணல், மரத்தாலான பாகங்கள் முதலியனவற்றை வழங்குவோரும், சுயமாகத தொழிலில் ஈடுபடும் அடிப்படையில் இயங்குவோராயின், தமது உற்பத்திப் பொருட்களை நேரடியாகக் கட்டடங் கட்டுவோருக்கே சந்தைப்படுத்துதற்கு வேண்டிய எல்லா உதவியும் அளிக்கப் பெறுவர்.

(8) கொழும்பிலும், பிற பெரும் நகர்ப்புற நிலையங்களிலும் உள்ள குடிசைகள், சேரிகள் பிரச்சினையானது சுய நிதியிடும் திட்டங்களின்மூலம் தீர்த்து வைக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், முதலில் அவர்களது வசிப்பிடமாக அமைந்த காணிகள், மேலும் உயர்ந்த விலைகளுக்கு விற்பப் படக்கூடும். அதன் நோக்கம், மேலும் திருப்திகரமான வீடுகளிலும், சூழல்களிலும் வதிவோருக்கு மீள இல்லம் பெற்றுக் கொடுத்தலில் ஏற்பாடு செய்யப்பெற்ற, இக்காலத்துக்கு ஏற்ற உதவுதொகைகளை ஈடுசெய்தலாகும்

(9) தேசிய வீடமைப்புத் திணைக்களம் மீள ஒழுங்கமைக்கப்பெறும் வீட்மைப்புத் திணைக்களம், ஆள்புல சிவில் பொறியியல் தாபனம், அரச பொறியியல் கூட்டுத்தாபனம், கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், வர்த்தக வங்கிகள் ஆகியவற்றின் வளங்களையும் சேவைகளையும், ஒருங்கிணைத்து, பிராந்திய வீடமைப்பு அதிகாரசபைகள் நிறுவப்படும்


(10) பிராந்திய வீடமைப்பு அதிகாரசபைகளினால் பாரமற்ற, குறைந்த விலை, தரப்படுத்தப்பட்ட, முன்னரே தயார் செய்யப்பெற்ற வீடமைப்புச் சாதனங்களானவை (இவற்றுள் மரத்தாலான உருப்படிகளும் அடங்கும்) பிராந்திய வீடமைப்பு அதிகாரசபைகளினால் உற்பத்தி செய்யப்படும். பற்பல வகையினவான கட்டடப்பொருட்கள் மேலும் மலிவு விலையில் பொது மக்களும் உள்ளூர் அரசாங்க நிறுவனங்களுக்கும் கிடைக்கக் கூடியனவாக்கப்படும்.

(11) பதிவு செய்யப்பட்ட கட்டடக் கம்பெனிகளுக்கு மேலும் உருப்படியான நிதி ஊக்குவித்தல்கள் அளிக்கப் பெறும் அவை வீடமைப்புச் சாதனங்களைப் பிராந்திய வீடமைப்பு அதிகாரசபைகளிடமிருந்து கொள்வனவு செய்யலாம்; அல்லது தரப் படுத்தப்பட்ட அத்தகைய சாதனங்களைத் தாமே உற்பத்தி செய்யலாம்.

ஒரு குடும்பமானது தனக்கு வேண்டிய இல்லத்தைத் தானே சொந்தமாகக்கொண்டிருக்க வழி செய்யு முகமாக, நிறுவன வாயிலாகவும், தனிநபர் உதவித் திட்டங்கள்மூலமும் எல்லாத் துறைகளிலும் கட்டிட அமைப்பு நடவடிக்கையானது ஊக்குமூட்டப் பெற்று உறுதியாக்கப்படும்.

எத்தகைய பொருளாதார முன்னேற்றமும், மக்களின் தன்விருப்பான, முழுமனமார்ந்த பங்குபற்றுதலைக் கொண்டதாக இருத்தல்வேண்டும் என்பதை எனது அரசாங்கம் நன்கு கணிக்கிறது. முன்னைய அரசாங்கமானது மக்களின் உற்சாகத்தைத் தட்டியெழுப்பவும் அவர்களது ஒத்துழைப்பைப் பெறவும் தவறியமைக்குக் காரணம் ஒன்றுண்டு. (மக்

7-ம் பக்கம் பார்க்க)



வேலர்: நெஞ்சிலை கல்லு வைச்சு உடைச்சு வித்தை காட்டிற பொடியன் ஆஸ்பத்திரியிலை படுத்திருக்குதாம்.

மயிலர்: ஏன் விலா எலும்பு ஏதும் நொருங்கிப் போச்சோ!?

வேலர்: இல்லை. ஆஸ்பத்திரியிலை நோயாளிகளை நடத்துகிற மாதிரியைப் பார்த்தாப்போலை நெஞ்சடைச்சுப் படுத்திருக்கிறார்.

சுந்தர்



# "எம். ஜி. ஆரை தி.மு.க.வில் இருந்து விலக்கவேண்டும்என்றவர்மனோகரன்"

## சட்டசபையில் கலைஞர் உரை

சென்னை, ஆக. 8

''தற்போதைய முதலமைச்சர் திரு.எம்; ஜி. இராமச்சந்திரனை தி.மு.க. வில் இருந்து நீக்க வேண்டுமென்ற செயற்குழுவின் தீர்மானத்துக்கு ஆதரவாகக் கையெழுத்திட்டவர் தான் தற்போதைய நிதியமைச்சர் திரு. மனோகரன் ஆவார்'' இவ்வாறு தமிழ்நாடு சட்டசபையில் நிதி நிலை மசோதா மீதான விவாதத்தில் உரை நிகழ்த்திய எதிர்க்கட்சி தலைவர் கலைஞர் மு கருணநிதி கூறினார்.

1972ம் ஆண்டு தி. மு க செயற்குழுவின் கையெழுத்துப் பிரதியை இவ்வேளை கலைஞர் சபையில் சமர்ப்பித்தார்.

### மனோகரன் பதில்

இதற்குப் பதிலளித்து நிதியமைச்சர் பேசுகையில், ''இது பழைய விஷயம் இதைப் பற்றி இப்போது பேசவேண்டியதில்லை. தி.மு க. அழிந்து விட்டது. சபையில் இப்படியான சம்பவம் இடம் பெறுவது தவிர்க்கப்படவேண்டும்'' என்றார்.

கலைஞர் தொடர்ந்து பேசுகையில் ''உண்மையான சிந்தனைத் தெளிவுடன் செயலாற்றுபவர்கள், கொள்கைப்பற்றுள்ளவர்கள் சுயநல நோக்குடன் மேற்கண்டவாறு காரியங்களை செய்யமாட்டார்கள்' என்றார்.

(கெ-உ)

### பயங்கரமாக வெடித்த எரிமலை

டோக்கியோ, ஆக. 8

வடக்கு ஜப்பான் தீவு ஒன்றில் நேற்று எரிமலை ஒன்று பயங்கரமாக வெடித்தது என்று அறிவிக்கப்பட்டது.

இந்த எரிமலையிலிருந்து சிதறிய பாறைகளும் தீ ஜுவாலையும் 36 ஆயிரம் அடி உயரத்திற்கு கிளம்பியது என்றும் இந்த எரிமலை வெடிப்பைக் கண்ணுற்ற பலர் தெரிவித்தனர். (இ)

---

## லண்டனில் தமிழ் மாணவர் மாநாடு

லண்டன், ஆக. 8

உலகநாடுகளில் வாழும், உயர்கல்வி பெறும் தமிழ் மாணவர்கள் எதர்வரும் 19ம் திகதி வெள்ளிக்கிழமை லண்டன் மாநகரில் கூடுகின்றனர். இதற்கான ஒழுங்குகளை லண்டன் தமிழ் தேசிய காங்கிரஸ் ஒழுங்கு செய்துள்ளது.

''மாணவர்களை இன்று எதிர் நோக்கும், அரசியல் நெருக்கடியில், தமது பங்கு'' என்னும் பொருள்பற்றி விவாதிக்கப்படவுள்ளன. இம் மாநாட்டில் முக்கிய தமிழ் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். (கெ-உ)

---

## "கிரேக்கத்தின் போக்கினால் சமாதானத்திற்கு பாதகம்"

### ரஷ்ய தினசரி குற்றச்சாட்டு

மாஸ்கோ, ஆக. 8

''கிரேக்கப் பிராந்தியத்திலுள்ள தமது இராணுவ, கடற்படைத் தளங்களை மேலும் 4 ஆண்டுகளுக்குப் பயன்படுத்துவதற்கு அமெரிக்காவுக்கு கிரேக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வகையான இராணுவ நடமாட்டங்கள் தெற்கு ஐரோப்பிய மக்களின் சமாதானத்துக்கும் பந்தோபஸ்துக்கும் ஊறு விளைவிப்பதாக உள்ளது'' என சோவியத் தினசரியான பிராவ்டா எழுதியுள்ளது.

''அமெரிக்காவுடனான இராணுவத் தொடர்புகள் ஏதனின் சுயேச்சையான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு ஒரு முட்டுக்கட்டையாக உள்ளது என பல கிரேக்கத் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் அமெரிக்க, நேட்டோ தளங்கள் கிரேக்க மண்ணிலிருந்து அகற்றப்படவேண்டும் என கிரேக்க மக்கள் தீவிர இயக்கம் நடாத்தி வருகின்றனர், ஆனால் கிரேக்க ஆளும்வட்டாரங்கள் இக்கோரிக்கையைப் பொறுத்து உதாசீனமாகஉள்ளன'' என பிராவ்டாமேலும் எழுதியுள்ளது. (உ)

---

## திருத்தணிகையில் பக்தர் வெள்ளம்

சென்னை, ஆக 8

முருகப்பெருமானின் ஆறு படை வீடுகளில் ஒன்றான திருத்தணிகையில் ஆடிக் கிருத்திகையை முன்னிட்டு ஏழு லட்சத்துக்குமதிகமான பக்தர்கள் உள்ளூரிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வந்து கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

(கு-உ)

---

## தமிழகக் கல்லூரிகளில் முதலமைச்சரின் 'படங்கள்

சென்னை, ஆக. 8

யானையடி நகராட்சி தொடக்கப் பள்ளிக்கு தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனது பெயர் சூடப்பட்டுள்ளது.

இப் பெயர்சூட்டு வைபவத்தை தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் திரு. முனு ஆதி சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்துவைத்தார்.

தமிழ் நாட்டில் உள்ள மற்றும் கல்லூரிகள் பலவற்றிலும் திரு எம் ஜி ஆரின் படங்கள் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டுள்ளன. (கெ-உ)

---

## சோவியத் — ஜப்பானிய மீன்பிடித்துறை உடன்படிக்கை

டோக்கியோ, ஆக. 8

மீன்பிடித்துறையில் சோவியத் ஜப்பானிய ஒத்துழைப்புக்கு வகை செய்யும் புதிய சோவியத்-ஜப்பானிய உடன்படிக்கையொன்று இங்கு கைச்சாத்திடப்பட்டது.

சோவியத் யூனியன் சார்பில் சோவியத் மீன்பிடித்துறை அமைச்சர் அலெக்ஸாண்டர் இஸ்கோவும், ஜப்பானிய அயல்துறை அமைச்சர் இக்கினோ ஹதோயாமாவும் மேற்படி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இவ்வுடன்படிக்கை கைச்சாத்தாகும் வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் ஜப்பானிய அயல்துறை அமைச்சர் ஹதோயாமா, ''மீன்பிடித் துறையில் சோவியத் யூனியனும் ஜப்பானும் நெடுங்காலமாக நல்ல பயனுள உறவுகளைப் பேணி வருகின்றன. புதிய உடன்படிக்கையின்கீழ் மீன்பிடிப் பிரதேசம் 200 மைல்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இருநாடுகளினதும் மீன்பிடித் தொழிலாளர்களின் நலன்களின் பேரிலும். இரு நாடுகளுக்கும் மத்தியில உறவுகள் வளர்ந்து வலுப்படுவதன் நலன்களின் பேரிலும புதிய உடன்படிக்கையின்கீழ் சோவியத்-ஜப்பானிய ஒத்துழைப்பு மென்மேலும் விரிவடையும் என நாம் நம்புகிறோம்'' என்றார். (உ)

---

"ஆபிரிக்க மக்களின்

# விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய உதவி தொடர்ந்தும் உண்டு"

### வெளியுறவு அமைச்சர் வாஜ்பாய் உறுதி

புதுடில்லி, ஆக. 8

''தென்னபிரிக்காவிலுள்ள தேசிய விமோசன இயக்கங்களுக்கு இந்தியா தொடர்ந்து உதவியும், ஆதரவும் வழங்க உறுதிபூண்டுள்ளது. ஆபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டம் நமிபியாவிலுள்ள சட்ட விரோத இனவாத ஆட்சியைக் கவிழ்த்தே தீரும்'' என இந்திய வெளிநாட்டமைச்சர் திரு வாஜ்பாய் 'சமாசார்' செய்தி ஏஜன்ஸிக்கு அளித்த பேட்டியொன்றின்போது கூறினார்.

''மொசாம்பிக் எல்லையில் அண்மையில் ரொடீஷிய இனவாதிகள் மேற்கொண்ட ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளும், இந்த ஆபிரிக்க நாடுகளுடனான எல்லைப் பிரதேசங்களில் பதட்டநிலையை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் எத்தனிப்புகளும் ஸ்மித்தினது இனவாத ஆட்சியில் வங்குரோத்து நிலையையே காட்டுகின்றன'' என அமைச்சர் வாஜ்பாயே தமது பேட்டியின்போது மேலும் கூறினார்.

இந்திய வெளிநாட்டமைச்சர் தமது தான்ஸானிய ராஜ்யத்தைப் பூர்த்தி செய்த பின்னர் புதுடில்லிக்குத் திரும்பிய போது மேற்படி பேட்டியை வழங்கினார்.

''நாம் தான்ஸானிய பிரதிநிதிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போது, தமது விமோசனத்துக்காகப் போராடும் ஸிம்பாப்வே, நமீபிய மக்களுக்கான அரசியல், தார்மீக, பொருளாதார உதவிகள் மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஏகாதிபத்திய- எதிர்ப்பு இனவாத எதிர்ப்பு சக்திகளின் கூட்டு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவதன் தேவையும் இப் பேச்சுவார்த்தைகளின் போது வலியுறுத்தப்பட்டது'' என அமைச்சர் வாஜ்பாயே மேலும் கூறினார். (உ)

---

## ஜாப். மாஜிஎம்.பிக்கள், கவர்னர்கள் மீது லஞ்சக் குற்றச்சாட்டு

### பலருக்கு தண்டனை விதிப்பு

டோக்கியோ, ஆக. 8

ஜப்பானிலுள்ள பல மாஜி பாராளுமன்ற உறுப்பினர்களும், கவர்னர்களும் தென் கொரிய ஏஜண்டுகளிடமிருந்து லஞ்சம் பெற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலருக்கு ஏற்கனவே, இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் ருஜுவாகி சிறைத் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், ஃபுக்ஷியா மாநிலத்தின் முன்னாள் கவர்னருமான மோரி கிமுதுவுக்கு 10 மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதே போலவே, ஜப்பானிய கவர்னர்கள் மன்றத் தலைவரும் லஞ்சம் பெற்றமைக்காக தண்டனை பெற்றுள்ளனர்.

தமது உத்தியோபூர்வ செல்வாக்கினைப் பாவித்து போலி காசோலைகளை அச்சடிக்கும் கோஷ்டியொன்றுக்கு உதவி வழங்கியமைக்காக மாஜி பாராளுமன்ற உறுப்பினரான ஏ. சுஸுக்கிக்கு 2½ ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்த லஞ்ச ஊழல்களில் சம்பந்தப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர்களே என ஜப்பானிய பத்திரிகைகள் எழுதியுள்ளன. (உ)

மலேஷியன் கைமார்க்
சாம்பிராணி
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5

---

# மதுபோதையில் விஷமருந்தி மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

மதுபோதையில் விஷம் அருந்திய நபர் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் ஒன்று யாழ்ப்பாணம் கஸ்தூரியார் ஒழுங்கையில் நடைபெற்றுள்ளது. சபாபதி ஆச்சாரி கறுப்பையா ஆச்சரி என்ற 32 வயதுடைய பிரஸ்தாபநபர் கொழும்பைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள தமது மைத்துனர் செல்லையா அறையில் பொற்றொழில் செய்து வந்தாராம்.

மது அருந்தும் பழக்கமுள்ள இவர் மூன்று தினங்களாக அறைக்கு வரவுமில்லையாம்.

சம்பவதினம் மதுபோதையில் விஷம் குடித்து விட்டு வத்து கீழே விழுந்தாராம்.

யாழ். பெரியாஸ்பத்திரிக்கு விரையப்பட்டும் உயிரைக் காப்பாற்ற முடியவில்லையாம்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (கூ)

---

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செவ்.

அல்லைப்பிட்டி மக்களுக்கு விவசாய ஆலோசனை வழங்கும் பொருட்டு விவசாயக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

விவசாயத் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இக்கருத்தரங்கில் யாழ். விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. சிவமுத்துலிங்கம், தலைமைப்பீட விவசாய போதனாசிரியர் திரு. பாலராசா, தீவுப்பகுதி போதனாசிரியர் திரு. சிவக்கொழுந்து உட்பட பலர் உரையாற்றினர். (கெ-உ)

சாந்தி ஃ ஜெமினி ஃ தேவிகா
யாழ். நகர் ஃ நிர்மலா ஃ நாகேஷ்
போன்: 7642 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
வெகுளிப்பெண்

RIO (Jaffna) Now Showing
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
Africa Texas Style
From 11-8-77
London Conspiracy


கடைசிவாரம்
ராஜா 91-வது தினம்
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள் போன்: 7180
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனம் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி: 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-லதா- நாகேஷ் அறிமுகம் பவானி நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL Daily at 4-45, 7-00 & 9-30 p.m.
(JAFFNA)
Christian Fechner the Creator of the "Crazyboys" now Presents his Most Hilarious Comedy to Date!
PIERRE RICHARD JANE BIRKIN
in
Claudezidis
"THE GOOSE CHASE"
Color



# குடமுழுக்கு

காரைநகர் பாலாவோடை முத்துமாரியம்மன் கோவில் குடமுழுக்கு வைபவம் இன்று நடைபெறுகிறது. மண்டாபிஷேகபூர்த்தி நிகழ்ச்சியையொட்டி மலர் ஒன்றும் இன்று வெளியிடப்படும். மலரை நல்லூர் குருமகா சன்னிதானம் பரமாசாரிய சுவாமிகள் வெளியிட்டு வைப்பார்.

கோவிலின் முகப்புத் தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள்.

(கெ-இ)

# கிராம...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் விருப்பத்துக்கு முற்றும் மாறான ஓர் அரசியல் உத்தியை நிருவாக அமைப்பினுள் கூடமாக உட்புகுத்த எத்தனித்தமையே அதுவாகும். அவ்வுத்திதான் யாது? ஒரு சில அரசாங்க அலுவலாளர்களாலும், அரசியல் பற்றுமிக்கோராலும் அவர்களது நலத்துக்காக மக்களை ஆள முனைந்தமையே அவ்வுத்தியாகும்.

உற்பத்தியின் சாதனங்கள், விநியோகம, பரிமாற்றம் என்பனவற்றின் உடைமையும் முகாமையும் இந்நாட்டு மக்களுக்குச் சொந்தமாயிருத்தலை உறுதி செய்யும் நோக்கத்துடன், எனது அரசாங்கமானது மக்களின் துறையொன்றையும் அதற்கு வேண்டிய துணை நிறுவனங்களையும் அமைத்தெழுப்பும். காணியற்றோருக்கு, வேண்டிய வசதிகள் கொண்டனவும், பொருளாதாரவகையில் பயன் தருவனவுமான காணித் துண்டங்களைக் கொடுத்துதவ ஏற்பாடு செய்தற்கு விசேட முதன்மையளிக்கப்பெறுதல் வேண்டும் என வலியுறுத்தப்படும். இவ்வாறாக, சிறு கமக்காரர் தமது சொந்தக் காணித் துண்டத்தைத் தாமே பயிரிட வழி வகுக்கப்படும். சிறு கைத்தொழிலில் ஈடுபடுபவருக்கு இது துணையாக அமையும். மேலும் சிறு வணிகரானவர் விநியோக அமைப்பு முறையில் ஒரு முக்கிய இன்றியமையா அங்கம் வகிப்பவராவர். ஆகவே, எனது அரசாங்கமானது, தனது வேலைத்திட்டங்களில் மாத்திரமன்றி, ஒழுங்கமைப்புகளிம்கூட கீழ்மட்டத்திலுள்ள ஆணும், பெண்ணும் மேலும் அதிக செல்வத்தை உண்டாக்கவும், மேலுங்கூடிய பணத்தை ஈட்டவும், தமது வாழ்க்கைத்தரத்தை சீரோங்கச் செய்யவும் உள்ள அவசியத்தை விசேடமாகக் கருத்தில் முன்வைத்தே செயற்படும்.

(தொடரும்)

# சணல் மூலம் பசளை கஷ்டத்தை தீர்க்கலாம்

யாழ்ப்பாணம், செவ்

'சணல் விதையின் மூலம் மண்வளத்தை போஷணையாக்குவதற்குச் சிறந்த பசளையாக்கமுடியும். முதல் மழையுடன் சணலை விதைத்து, பூக்கும் பருவத்தில் உழுது மண்ணுடன் சேர்ப்பதால் பெருந்தொகையான பசுந்தாள் பசளையை மண்ணுக்கு ஊட்டலாம்' என தீவுப்பகுதி விவசாய போதனாசிரியர் திரு. க. சிவக்கொழுந்து நயினாதீவில் நடைபெற்ற கருத்தரங்கில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், அவுரி, காவுளாய், கெனிஞ்சி, பூவரசு போன்றவற்றைப் போல் சணலும் சிறந்த பசுந்தாள் பசளையாகும். காலபோக மேட்டுப்பயிர் செய்கையாளர் ஆவணி முற்பகுதியில் விதைத்து கார்த்திகை முற்பகுதியில் பசளையாக்கிக் கொள்ளமுடியும்.

விவசாயப்பகுதியினர்விவசாயிகளுக்கு பசளை இரசாயன பொருட்கள் கடன்வசதி விதையாகியவற்றைவழங்கும் போது நவீன மாற்றங்களுக்கமைய விவசாய முறைகளையும் கைக்கொள்ளவேண்டுமென்றார்.

நயினாதீவு மக்களுக்கு விவசாய சேவையை வளம்படுத்த பயிர் அபிவிருத்திச்சபை ஒன்றும் தெரிவாகியுள்ளது. (கெ)

# நெல்லியடியில் செத்தல் மிளகாய் 5 ரூபா

உடுப்பிட்டி. திங்கள்

வடமராட்சிப் பகுதியில் முன்னர் 16 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வந்த செத்தல் மிளகாயின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

தற்போது ஒரு ருத்தல் செத்தல் மிளகாய் ஐந்து ரூபாவுக்குத் தாராளமாகப் பெறக்கூடியதாக உள்ளது. ஏற்கனவே வியாபார நோக்கத்துடன் அதிக விலைக்குச் செத்தல் மிளகாயைக் கொள்வனவு செய்து பதுக்கிவைத்த பலரும் முதலுக்கே மோசம் வந்த நிலையில் தம்மிடம்முள்ள செத்தல் மிளகாயை விற்றுத் தீர்த்துவிடும் முகமாக வெகுவாக விலையைக் குறைத்து வருகின்றனர்.

வெங்காய விலையும் வெகுவாகக் குறைந்துள்ளது. (அ)

# 3 நாள் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் நக்காவீதியிலுள்ள ஜோன் பொஸ்கோ பாடசாலையில், சிறுவர் பொருட்காட்சியொன்று நாளை முதல் 3 தினங்களுக்கு தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. (க)

நாகம்ஸ்
(ஒன்னகம்),
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
கண்ணப்பா — அஞ்சலிதேவி
டவுண் பஸ்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-15
சனி, ஞாயிறு 2-30
வளர்பிறை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம் ஜி ஆர் -சரோஜாதேவி
பணத்தோட்டம்

வின்ஸர் இப்பொழுது நடைபெறுகிறது
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்



சிவாஜி, மஞ்சுளா,
கமலஹாசன், தேவிகா,
ஜெயசித்ரா,
எஸ். வி. சுப்பையா
நடித்த
சத்யம்
டைரக்ஷன்: S. A. கண்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
(திரைக் கதை, வசனம்: வியட்நாம்வீடு சுந்தரம்)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா நடித்த
பட்டணத்தில் பூதம்
(கறுப்பு - வெள்ளைப் புதிய பிரதி)
19-ந் திகதி முதல்
சிவகுமார் அன்னக்கிளி சுஜாதா

கடைசி வாரம் 96-வது நாள்
ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
நாளை நமதே
15ம் திகதி முதல் சிவாஜி-கே. ஆர். விஜயா
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)

ஈழநாடு
EELANADU

ரோட்டறிக் காணிவலில்

# காதைக்கவர்ந்தது கீதம்; கண்ணைக்கவர்ந்தது

மாலை இளந்தென்றலுடன் கலந்தெழுந்த இன்னிசைநாத மானது அலைமோதிய மக்கள் வெள்ளத்தை மகுடியில் கட்டுண்ட நாகமெனத் திறந்த வெளி அரங்கின் முன் அமர வைத்தது.

### இசைத்தென்றலின் இசைமழை

தென்னிந்திய வானிலே நிலையான புகழை நிலைநாட்டிச் சம்பத்தில் யாழகம் திரும்பிய ஹிந்தி இசைத்தென்றல் அன்ரன் டேவிட்டின் அற்புதமான ஹிந்திப்பாடலிலே கிறுங்கிப் போயிருந்தது மக்கள் வெள்ளம். ''டாக்'', ''சலோ'' போன்ற பிரபல ஹிந்திப்படங்களின் பாடல்களை அடுத்துரசிகர்களுக்கு இசைப்போதையூட்டிய 'அன ஈவினிங் இன் பரிஸ்' பாடல்களைப்பாடினார்டேவிட். அவ்வளவுதான், அதுவரை அமைதியாக இருந்த இரசிகர்கள் இசைவெறியின் எல்லையிலே களிப்பு நடமிடத் தொடங்கினர்.

### பரமேஸ்-கிறேஷியன்

யாழ். நகரின் பொப் இசை வானின் சுடர்விடும் நட்சத்திரங்கள் கே. எஸ். பாலச்சந்திரன்-மகேந்திரன் போன்றோருடன் திருப்புகழ் பரமேஸ்-கிறேஷியன் ஆகியோரும் இணைந்து நிகழ்ச்சிக்கு புது மெருகூட்டினர்.

''உன்னை அழைத்தது நான் இல்லை என் அன்புள்ளம்'' எனத் தொடங்கும் புதியதோர் பாடலைப் பரமேஸ் பாடினார். இப்பாடல் விரைவில் இசைத்தட்டு வடிவம் பெற இருக்கின்றது.

திருமலைக் கிறேஷியன் ஆங்கில-ஹிந்தி – சிங்களப் பாடல்களைப்பாடி இரசிகர்களைப்பரவசத்தில் ஆழ்த்தினார்.

அன்ரன் டேவிட்டின் தில்லானாப் பாடலுடன் இவ்விசைத் தென்றல் வானில் மிதந்து மறைந்து ரசிகர்களின் இதயத்தில் இடம்பிடித்தது.

### அக்பரின் அதிசயச்செயல்கள்

சம்பத்திரிசியார் கல்லூரியின் மூன்றுவது மாடியின் திரண்டிருந்த மக்கள் பிரபல மாஜிக்நிபுணர் அக்பரின் அதிசயங்களைக்கண்டு ஆச்சரியத்தில் மூழ்கிப்போயிருந்தார்கள்.

### கோல் விளையாட்டு

கையிலே வைத்திருக்கும் கறுப்புக்கோலிலே கைவைக்கிறார் அக்பர். அவ்வளவுதான், அழகிய லேஞ்சியாக அதுமாறி விடுகிறது. சபையில் இருக்கும் சிறுவன் ஒருவனை மேடைக்கு அழைக்கிறார். மேடையில் ஏறிய அவன் கையில் தனது கோலைக்கொடுக்கிறார். மறுகணம் கோலானது வளைந்து நெளிகிறது. சிரித்துவிட்டு கோலை மீண்டும் தொடுகிறார். கோல் நேராக நிற்கின்றது.

### முட்டையிடுதல்

அந்தச்சிறுவனைப் பிடித்து பின்புறத்துக்குத் திருப்புகின்றார். மறுகணம் அவனது பின்புறக்காற்சட்டையைப் பிரித்து புதுமுட்டை ஒன்றை எடுக்கின்றார். எடுத்த முட்டையைத் தனது கைக் கக்கத்துக்குள் வைத்ததும் அம்முட்டை மாயமாக மறைந்து விடுகின்றது.

## மாயாஜாலம்

### காசு வரவழைத்தல்

வெற்றுப்பேணி ஒன்றைத் தூக்கும் அக்பர் அப்பேணியுள் காசுகளை வரவழைத்துக்காட்டுகின்றார். பேணிக்குள்மட்டுமல்லாமல் மேடையில் ஏறியசிறுவனின் கை, முதுகு போன்ற இடங்களிலிருந்தும் காசுகளை வரவழைத்துக்காட்டினார்.

### ஒட்டும் வளையல்கள்

கைகளில் பல வளையல்களை எடுத்து ஒன்றுடன் ஒன்றைத் தொட்டுக் காட்டுகின்றார். அவைகள் ஒட்டவில்லை ஆனால் சில நிமிடங்களில் அவைகளை தொடுகின்றார். அவை பெரும் வளையமாலையாக ஒன்றுடன் ஒன்று ஒட்டுப்படுகின்றன.

### ஒரு வெட்டு துண்டு மூன்று

அழகிய இளம் மங்கை ஒய்யாரமாக நடந்துசென்று கண்ணாடிப் பீரோவுள் ஏறுகின்றாள். முகம் தெரிகின்றது, வயிறு, கைகால்கள் தெரிகின்றன. இரு உலோகத் தட்டுக்களை அவளின் வயிற்றில் பாய்ச்சுகின்றார் அக்பர். மறுகணம் அவளது வயிறு இருக்கும் பகுதியுள்ள பெட்டி அகற்றப்படுகிறது. முகமும் கால்களும் ஒரே இடத்தில் வயிறு இருக்கும் இடத்தில் பெரும் இடைவெளி. வயிறு அருகினிலே இடைவெளியுள் அக்பர் முகத்தை வைத்துக் காட்டுகின்றார். சில நிமிட நேரத்தின்பின் மீளவும் வயிற்றுப்பகுதி அவளுடன் பொருத்தப்படுகின்றது. அவள் உயிர் பெற்று எழுந்து அழகாகநடையிடுகின்றாள்.

### ''சிஞ்-சங்'' குழந்தை

அழகிய பாவைப்பிள்ளை, அக்பர் அதனைத் தூக்கியதும் அது பேசத்தொடங்குகிறது. உன்னுடைய பெயரென்ன? 'சிஞ்-சங்'' எனபதில் கிடைக்கிறது உன்னுடைய அப்பா ''யார்?'' ''அம்மாவுடைய புருஷன்'' ''அம்மாயார்?'' ''அப்பாவுடைய பெண்சாதி'' வேடிக்கையாகச் சொல்கிறது, மேடையில் இருந்து கொண்டே கூட்டத்தில் இருப்பவர்கள் அணிந்துவரும் சேலைகளுடைய நிறங்களைக்கூடச் சொல்கிறது. இப்படிஎத்தனையோ அதிசயங்களைப் பார்த்து மக்கள் மூக்கின் மேல்விரலை வைக்கின்றனர்.

### அந்தோனியார் நிதி

காணிவலில் தம்மைமறந்து இருக்கும் அன்பர்க்கு வயிற்றுப்பசி எழுந்தால் சுடச்சுட சிற்றுண்டிகள் அளித்து அதே நேரத்தில் ஊர்காவற்றுறை அந்தோனியார் கோவில் கட்டிட நிதிக்கும் பணம் சேகரிக்கும் நிலையம் ஒன்று மைதானத்தில் உள்ள சிறிய கோவிலுக்கு அருகே அமைக்கப்பட்டுள்ளது. மைதானத்துக்கு அழகூட்டும் நீர்த்தாரைகளுக்கு அருகே இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

### வட்டு எம்.பி. திறந்துவைத்தார்

நேற்றுமுன்தினம் ரோட்டறிக் காணிவலை வட்டுக்கோட்டைத்தொகுதித் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு திறந்து வைத்தார். ரோட்டரிச் சங்கத்தலைவர் திரு. குணரத்தினமும், சம்பத்திரிசியார் கல்லூரிப் பழையமாணவர் சங்கத்தலைவர் டாக்டர். பிலிப்புவும் திரு. திருநாவுக்கரசு எம்.பி.யை மேளதாள மாலை மரியாதைகளுடன் வரவேற்று மேடைக்கு அழைத்து வந்தனர். காணிவலில் குழுமிநின்ற மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

—பற்றிமாகரன்



ரோட்டறிக் காணிவலின் முதல்நாளன்று யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையும், யாழ். அரசாங்க அதிபர் டபிள்யூ. ஏ. எல். விஜயபாலாவும் குத்துவிளக்கேற்றித் திறந்துவைக்கையில் எடுக்கப்பட்ட படம். ரோட்டறிச் சங்கத் தலைவர் திரு. ஆர். ஜே. குணரத்தினம், சம். பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர் பிலிப் ஆகியோரும் அவர்களை வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

'தொழில் முன்னிலைப்பாடம்

# மாணவர் வாழ்வில் நம்பிக்கையை ஊட்டுகிறது'

மட்டுவில், திங்கள்

''புதிய கல்வித்திட்டத்தின் கீழ் அமுல்செய்யப்பட்ட தொழில் முன்னிலைப் பாடத்தில் மாணவர் தமது ஆரம்ப காலத்திலிருந்தே கவனம் செலுத்திவந்தால் அவர்களின் வாழ்வு ஒளிமயமானதாக அமையும். அவர்களுக்கு வாழ்க்கையில் விரக்தி என்பது தலைகாட்டவே முடியாது. ஆகவே பெற்றாரும் மாணவரும் இதை பெரிதும் ஆதரிக்கவேண்டியது அவசியம்.''

இவ்வாறுசாவகச்சேரிமகளிர் மகாவித்தியாலத்தில் மாணவர்களின் கைத்தொழில் பொருட்காட்சியை உத்தியோக பூர்வமாகத் திறந்துவைத்து உரை நிகழ்த்திய வடமாநில பிரதம கல்வி அதிகாரி திரு. என். ஆர். பாலசிங்கம் கூறினார்.

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய 6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்பு மாணவர்களின் கலை, விஞ்ஞான, கைத்தொழில், விவசாய, மனையியல், கணித, பொருட்கள், இப்பொருட்காட்சியில்இடம்பெற்றன.

வித்தியாலய அதிபர் திருமதி பி. சிவசங்கரம் தலைமையில் இப்பொருட்காட்சி ஆரம்பமானது.

திரு. பாலசிங்கம் தொடர்ந்து கூறியதாவது:

''இளமையிலேயே மாணவர்களின் சிந்தனையை, தொழிற்கல்வியில் திசை திருப்பினால் அவர்களின் சிந்தனை, ஏட்டுக்கல்வியில் ஈடுபடாது என்று எண்ணும் ஒருசாராரும் இன்று நமது மத்தியிலே இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அது தவறான எண்ணமாகும். இபபடியான தொழில் முன்னிலைப் பாடத்தில் அவர்களைத் திசை திருப்புவதின் மூலம் அவர்களின் சிந்தனை, செயல் சுறுசுறுப்படைகிறது. அவர்களுக்கு தொழிற்கல்வி, ஏட்டுக்கல்வி சகலதுறைகளிலும் ஈடுபாடு ஏற்படுகிறது. அவர்களின் எதிர்காலமும், நமது நாட்டின் எதிர்காலமும் நல்ல வளமாக அமைய முடியும்'' என்றார். (உ)

## இன்று சமாதி அடக்கம்

மாவிட்டபுரம், திங்.

குப்பிழான் சிவகாமிஅம்மன் ஆலயத்தில் நீண்டநாட்களாகச் சமயத்தொண்டாற்றிய அருட்பெருஞ்சோதி அம்மா நேற்று முன்தினம் சமாதி அடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று மேற்படி ஆலயத்தில் சமாதி அடக்கம் செய்யப்படும்.

## சாரதாவுக்கு பொன்னாடை கௌரவம்

யாழ்ப்பாணம், செவ்.

''ஆசிரியர் திரு. இ. சரவணமுத்து உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் அரிய சேவை புரிந்த காரணத்தினால் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களது நன்மதிப்பை நிறையப் பெற்றுள்ளார். அன்னாருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராய்ப் பல்லாண்டு பணி புரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. இ சரவணமுத்து [கவிஞர் சாரதா]வுக்குப் பொன்னாடை போர்த்திப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. வி. அரியநாயகம் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. க. பாலசுப்ரமணியம் பேசுகையில், நாட்டுக்கு நல்ல பணி ஆற்றுபவர்கள் ஆசிரியர்கள். திரு. இ. சரவணமுத்து மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் நன்மதிப்பைப் பெற்றுள்ளமை மிகவும் பாராட்டத்தக்கது என்றார்.

மேல் வகுப்பு மாணவி செல்வி. ஐ. குணமனோகரி, ஆசிரியர் திரு. இ. நாகலிங்கம், துணை அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் மற்றும் திருவாளர்கள் து. சிவசுப்பிரமணியம், செ. சின்னத்தம்பி, க. கணபதிப்பிள்ளை, திருமதி. ல. மகேந்திரன், செல்வி. வ. செல்வத்துரை உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர். [அ]

# வாலிபர் மீது இரு ஜீவனாம்ச வழக்குகள்

## ஒரு வழக்கில் சிறை

வண்ணார்பண்ணை. திங்

ஒரு வாலிபரிடம் இருந்து இரு இளம் பெண்கள் ஜீவனாம்சம் கோரித் தொடர்ந்த வழக்குகள் ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜெகசோதி முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன

காரைநகர் களபூமியைச் சேர்ந்த கந்தையா இராசலிங்கம் என்ற 28 வயது வாலிபரிடம் இருந்து இதே இடத்தைச் சேர்ந்த அன்னம்மா ஜீவனாம்சம் கோரி தொடர்ந்த வழக்கில் பிரதிவாதி இராசலிங்கம் 568 ரூபா தனது மனைவிக்கு கட்டமறுத்ததால் ஐந்து மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

இவ்வழக்கை அடுத்து இதே பிரதிவாதிக்கு எதிராக தொடரப்பட்ட மற்றொரு வழக்கும் விசாரணைக் கெடுக்கப்பட்டது. இதே கிராமத்தைச் சேர்ந்த சின்னம்மா என்ற இளம் பெண் தனக்கும் தனது ஒருவயது பெண் குழந்தைக்கும் ஜீவனாம்சம் கோரி இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். பிரதிவாதியான இராசலிங்கம்சின்னம்மா தனது மனைவி இல்லை என்றும் இக்குழந்தை தனக்குப் பிறக்கவில்லை என்றும் தெரிவித்தார். நீதிபதி மேல் விசாரணைக்காக வழக்கை ஒத்தி வைத்தார். (உ)

## வெள்ளம் தணிகிறது

புதுடில்லி. அக். 8

வடஇந்தியாவில் வெள்ளப்பெருக்கு தணிந்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.

யமுனை நதியின் நீர்மட்டம் குறைந்துவருவதாகவும் மீட்பு வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

## பொருட்காட்சியும் கலை விழாவும்

யாழ்ப்பாணம், செவ்

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவர்கள் எதிர்வரும் 10 ம், 11ம் திகதிகளில் பொருட்காட்சியையும், கலைவிழாவையும் நடாத்துகின்றனர். பொருட்காட்சியை பிரதம கல்வி அதிகாரி வடமாநிலம் திரு. பொ. சி. சிவபாதம் திறந்துவைப்பார். வட்டுக்கோட்டை கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராஜா குத்துவிளக்கேற்றி வைப்பார். பொருட்காட்சியில், மாணவமாணவிகளின், விஞ்ஞான, கலை, கைப்பணி, தையல் சமையல் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

11ந் திகதி நடைபெறும் கலைவிழா, கல்லூரிஅதிபர் திரு. நா. ஆ. நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளன. விழாவில் கல்வி அதிகாரி வடமாநிலம் திரு. சு. சிவசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். நிகழ்ச்சிகளில், ஆங்கில, தமிழ் நாடகங்கள் நடனங்கள் பாடல்நிகழ்ச்சிகள் இடம்பெறும். (கெ)

## கழுத்து நெரித்து கொலை!

கொழும்பு திங்கள்

நள்ளிரவுக்குப்பின் படுக்கைக்குச் சென்றவர் அதிகாலையில் பயங்கரமாகக் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுக்கிடந்தார்.

நெஞ்சை உலுக்கும் இச் சம்பவம் கொச்சிக்கடையில் நடைபெற்றுள்ளது.

ஷெல்டன் பொன்சேகா (49 வயது) என்ற குமாஸ்தாவே இவ்விதம் பயங்கரக் கொலைக்கு இலக்காகி இருப்பவராவார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட்டு ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389. Registerd as News paper in Sri Lanka.